**சிலாபம் பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 02 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 10 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களின் மூலம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சிலாபம் பிரதேச சபையின் நிதி நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசோட்டத்தையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னேஸ்வரம் ஓய்வெடுக்கும் மண்டபத்தின் முன்னாள் குத்தகைப்பெறுனரிடமிருந்து நிலுவை வாடகையாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 181,347 தொகையும் சபைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்த பொதுக் காணிகளின் பெறுமதியான ரூபா 1,020,000 தொகையும் மாகாண கட்டுப்பாட்டுச் சேவைகள் ஓய்வுதிய நிதிக்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 7,946,185 தொகையும் நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தன.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது முத்திரைக் கட்டண மிகை ஏற்பாட்டுத் தொகையான ரூபா 1,275,971 தொகை மீளாய்வாண்டிற்கான ஏனைய வருமானக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுவதனால் வருமானம் ரூபா 1,275,971 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2013 ஆம் ஆண்டின் போது விற்பனை செய்யப்படாதிருந்த 42 – 9088 ஆம் இலக்க மற்றும் 43 – 3972 ஆம் இலக்க இரண்டு லொறிகளும் ரூபா 1,232,000 இற்கு விற்பனை செய்யப்பட்டதாகக் கருதப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டமையால் கடன்பட்டோர் பெறுமதியும் மூலதன வருமானப் பெறுமதியும் ரூபா 1,232,000 தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டின் போது இடமளிக்கப்படக்கூடிய கொடுப்பனவுகளுக்குரித்தான பெறுமதி சேர் வரிப் பெறுமதியான ரூபா 119,056 தொகை வருமானமாகப் பெற்றுக்கொள்ளப்பட்டிராமையால் அப் பெறுமதியால் வருமானம் குறைவாகவும் மீளச் செலுத்தப்பட வேண்டிய வைப்பின் பெறுமதி அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) வழங்கல் மற்றும் உபகரணச் செலவினத்தொகையான ரூபா 31,680 தொகையால் அதிகரித்துக் காண்பித்ததுடன் உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்படாத கைத்தொழில் பெறுமதியான ரூபா 1,201,210 இற்காக கடன்கொடுத்தோர் ஏற்பாட்டை மேற்கொள்வதன் மூலம் கடன்கொடுத்தோர் பெறுமதியும் மூலதன சொத்துக்கள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவினம் அதே தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) கொள்வனவு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராத கப் வண்டியின் பெறுமதிக்காக ரூபா 8,000,000 தொகையான கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக இப் பெறுமதியால் கடன்கொடுத்தோர் மற்றும் உபகரணச் செலவினம் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட எட்டு கணக்கு விடயங்களின் மீதிகளின் பெறுமதி இதற்குரித்தாகப் பயன்படுத்தப்பட்ட பதிவேடுகளுடன் இணக்கம் செய்யப்பட்டிராததுடன் அவ் விடயங்களின் இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகளின் பெறுமதி ரூபா 11,479,240 ஆகக் காணப்பட்டன.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

கடன்பட்டோர் மீதிகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,730,581 தொகையான நீண்ட கால கடன் பெறுமதி அறவிடப்படுவதில் உறுதியற்ற தன்மை அவதானிக்கப்பட்டதுடன் கடன்கொடுத்தோர் மீதியில் உள்ளடங்கிய 05 ஆண்டுகள் கடந்த நிலுவையான ரூபா 120,000 தொகையான கடன்கொடுத்தோருக்கு உரிமைகொள்வது நிச்சயமற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 05 கணக்கு விடயங்களுக்குரித்தான ரூபா 296,813,966 பெறுமதி கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,345,092 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 40,881,420 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (அ) | வீதவரியும் வரியும் | 2,254 | 2,393 | 2,569 |
| (ஆ) | வாடகை | 6,812 | 6,525 | 876 |
| (இ) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,237 | 3,237 | - |
| (ஈ) | ஏனைய வருமானம் | 75,173 | 64,563 | 107,157 |

**2.2.2 வீத வரி**

மீளாய்வாண்டின் போது வீதவரி சேகரிப்பு சாதகமான நிலையில் நிலவியபோதிலும் ஆண்டின் இறுதியிலான ரூபா 2,357,400 தொகையான நிலுவை வீதவரித் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினரிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதி மன்றத் தண்டப் பணம் | 8,310,387 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 42,796,885 |

**2.4 முகாமைத்துவச் செயற்திறமையீனங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 25 புத்தக அடியிதழ்களின் விபரம் அடியிதழ் பதிவேட்டில் காண்பிக்கப்பட்டிராததுடன் இவற்றில் 06 புத்தக அடியிதழ்கள் உப அலுவலகங்களுக்கோ அல்லது புத்தக அடியிதழ்கள் பயன்படுத்தும் எந்த உத்தியோகத்தரிடமும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அப் புத்தக அடியிதழ்கள் பௌதீக ரீதியாகக் காணப்படாததுடன் இவை தொடர்பாகக் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்படும் வரை முகாமைத்துவத்தின் கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்புத் தொகையின் தாமதம் காரணமாக மிகைக்கட்டணமாக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 22,392 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

06 செலவின விடயங்களுக்குரித்தாக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,350,000 தொகையான ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் 07 செலவின விடயங்களுக்குரித்தாக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,685,000 தொகையான ஏற்பாட்டில் ரூபா 1,463,970 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. அதன் சதவீதம் மொத்த ஏற்பாட்டின் 87 சதவீதமாகக் காணப்பட்டது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்து முகாமைத்துவம்
(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு